2008 மே 6]

203—

அணைக்கட்டு

***3569—செல்வி ஆ. அங்கையற்கண்ணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் அருகே எல்.என். பட்டி கிராமத்தில் முசுகுந்தா நதியில் அணை கட்டும் பிரேரணை அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.

செல்வி ஆ. அங்கையற்கண்ணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் எவ்வளவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது, எப்பொழுது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சுமார் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வனத் துறையினுடைய நிலம் தேவைப்படுகிறது. புஞ்சை நிலம் தேவைப்படுகிறது. அதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தைக் கேட்க மதிப்பீடு ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து அது திரும்பி வந்த பிறகு, அடுத்த கட்ட நடவடிக்கை தொடரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.

செல்வி ஆ. அங்கையற்கண்ணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணி நதியின் குறுக்கே பூட்டை அணைக்கட்டு உள்ளது. அது பழுதடைந்து 5 ஆண்டுகள் ஆகிறது. இதனால், பூட்டை, செம்பராம்பட்டு, பொக்கினம், நெடுமானூர், சோழம்பட்டு ஆகிய ஏரிகளில் மழைக் காலங்களில் நீர்த்தேக்கம் இல்லாமல் அவை வறண்ட நிலையில் உள்ளன. அவற்றைச் சீரமைக்கும் பணியை எப்போது செய்வார்கள் எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் எல்.என்.பட்டி அருகில் முசுகுந்தா நதியில் அணை கட்டப்படுமா என்று கேட்டார்கள். பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். எவ்வளவு மதிப்பீடு என்று கேட்டார்கள். 9 கோடி ரூபாய் என்று சொன்னேன். எந்த நிலையில் இருக்கிறது என்று கேட்டார்கள். கலெக்டரிடம் ரிப்போர்ட் இருக்கிறது என்று சொன்னேன். இப்போது இதைக் கேட்கிறார்களே, இது எந்த ஊரிலே? (குறுக்கீடு) இது வேறா? இவ்வளவு பெரிய யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அது நியாயம்தானா என்று அரசு யோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் வட்டத்தைச் சார்ந்திருக்கிற கொம்பேரிப்பட்டி கிராமத்தில் மாங்கும்பாற்று அணை கட்ட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் பெருமானிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாங்கும்பாறும் ஆய்வில் இருக்கிறது.

2008 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட அருணகிரிமங்கலத்தின் வழியாக மருதையாறு பல்வேறு கிராமங்கள் வழியாக பாய்ந்து, கொள்ளிடத்தில் கலந்து, அதற்குப் பின்பு கடலில் கலக்கிறது. சுற்றப்புற கிராமங்களில் உள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலையும், கால்நடைத் தொழிலையும் செய்து வருவதால், அந்தப் பகுதியில் ஒரு அணைக் கட்ட வேண்டுமென்பது நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையாக இருந்து வருகிறது. கடந்த கால ஆட்சியின்போது இது அரசின் பரிசீலனையில் இருந்தது. எனவே, அந்தப் பகுதியினுடைய மக்களின் நலனைக் கருதி மருதையாற்றின் குறுக்கே அருணகிரிமங்கலத்தில் அணை கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தொகுதி? வரகூர் தொகுதியா? அதாவது கொள்ளிடத்திலே வடவாற்றிலே கலக்கிற அந்த மருதையாறு பற்றிதானே சொல்கிறீர்கள்? இப்போது கொள்ளிடக் கரையை பலப்படுத்துகிறோம். அதேமாதிரி மருதையாறும்; அதுதான் வடவாற்றில் தண்ணீரைக் கொண்டு வந்து சேர்க்கிற இடம். மருதையாற்றையும் கருவாட்டு ஓடையையும் பலப்படுத்தும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையைக் கட்டுகிற கேள்வி. நமக்கு மிக முக்கியப் பிரச்சினையாக இருக்கிற முல்லைப் பெரியாறு அணையைப் பற்றி இன்றைக்குப் பத்திரிகையில் ஒரு செய்தி. கேரளத்திற்காக நீதிமன்றத்திலே வாதாடக்கூடிய வழக்கறிஞர்கள் அதைப் பார்வையிடுவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அது பற்றி நம்முடைய அரசுக்குத் தகவல் உண்டா? இப்படி ஒருதலைப்பட்சமாக பார்வையிடுவதால் நமக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையை யார் வேண்டுமானாலும் பார்வையிடலாம். நூற்றுக்கணக்கான பயணிகள் போய் பார்க்கிறார்கள். அவர்களிலே ஒருவராக அந்த வழக்கறிஞர்களும் போகலாம். யார் பார்த்தாலும் சரி, கேரளத்தினுடைய அமைச்சர்கள் பார்த்தாலும் சரி, கேரளத்திற்காக நீதிமன்றத்திலே வாதாடுகிற வழக்கறிஞர்கள் பார்த்தாலும் சரி, ஏன் அந்தத் தீர்ப்பைக் கொடுக்கிற நீதிபதிகளே வந்து பார்த்தாலும் சரி, பார்க்கட்டும், நம்மிடத்திலே ஒளிவுமறைவு இல்லை. அணை பலமாக இருக்கிறது என்பதை ஆயிரம் மேடைகளிலே சத்தியம் செய்து நிரூபிப்பதற்குத் தமிழக அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

204—

மருத்துவக் கல்லூரி

***28691—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.